ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2120/8 - 2019 අප්‍රේල් මස 23 වැනි අඟහරුවාදා - 2019.04.23
*2120/8 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 23 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: KDS/ PDB/ 4/3/10/(iv).
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4 - 3/11/2017/UD/172.

பொது மக்கள் தேவைக்காக கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியாளர் எண்ணியிரு க்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில், பாத்ததும்பரை பிரதேச செயலாளர் பிரிவில், பல்லேகம்பஹ கோரல சிறு பிரிவில், வலல கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்திற்கு பதிலாக சிரேஸ்ட நில அளவைகள் அதிகாரி மூலமாக அளவிடப்பட்ட, மாஹா/ 6911 ஆம் இலக்கத்தினுடைய அடிப்படை வரைபடம் காணித்துண்டு இல. ஒன்றினையுடைய கங்காணியாகே வயல் வெளி. முழு விஸ்தீரணம் 0.0008 ஹெக்டயர் அளவில், கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளில் அமைந்துள்ள காணித்துண்டு :

01. **துண்டு இல. 01**

**காணியின் பெயர்: கங்காணியாகே வயல் வெளி; விஸ்தீரணம்: 0.0008 ஹெக்டயார்**

வடக்கு : பாதை (வீதி அபிவிருத்தி அதிகார சபை) மற்றும் ஆரம்ப வரைபட இல. 6394 இனுடைய காணித்துண்டு இல. 61 ; கிழக்கு: ஆரம்ப வரைபட இல. 6394 இனுடைய காணித்துண்டு இல. 61, 60 மற்றும் டபிள்யூ. எம். ஜீ. என். வஹிந்தர உரிமை கோரும் கங்காணியாகே வயல் ; தெற்கு : டபிள்யூ. எம். ஜீ. என். வஹிந்தர உரிமை கோரும் கங்காணியாகே வயல் மற்றும் கே. ஏ. என். டபிள்யூ. நாணயக்கார உரிமை கோரும் கங்காணியாகே வயல் வெளி ; மேற்கு: கே. ஏ. என். டபிள்யூ. நாணயக்கார உரிமை கோரும் கங்காணியாகே வயல் மற்றும் வாய்க்கால்.

உரிமை கோருபவரின் பெயர் மற்றும் முகவரி :

கே. ஏ. என். டபிள்யூ. நாணயக்கார
இல. 174,
8 கணுவ,
வளவ,
மெணிக்ஹின்ன

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆந் திகதி மு. ப 10.00 மணிக்கு பாத்ததும்பரை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டீ. ஜீ. சீ. ஜயதுங்க,
பிரதேச செயலாளர்,
பாத்ததும்பரை.

பிரதேச செயலகம்,
பாத்ததும்பரை,
2019, ஏப்பிறல் 10.

05 - 93